**அனைத்துலக திருமந்திர மாநாடு  நாள்  27 சனவரி 2016**

**மலாயாப் பல்கலைக்கழக இந்திய ஆய்வியல் துறை**

**உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் உலகத்தமிழ் மற்றும் சோதிடவியல் ஆய்வு மையம் இணைந்து நடத்தும்**

## அனைத்துலக திருமந்திர மாநாட்டுக்கான  சிறப்பு கட்டுரை

# "பிரபஞ்ச இரகசியத்தின் ஓவியர்-மு. நமசிவாயம்"

**" நான் வேலைபார்த்த நூலகத்தில்  இரண்டரை இலட்சத்திற்கு  மேலான  புத்தகங்கள் இருந்தன ஆனால் நான் படித்தது திருமந்திரத்தை மட்டும்தான். அந்த புத்தகம் மட்டும்தான் என்னை நோக்கி வந்தது "** இப்படி விவரிக்கிறார் இந்த கட்டுரையின் நாயகர் திரு.மு. நமசிவாயம் அய்யா. ஒருங்கிணைந்த மதுரையில்  திரு. முத்துதேவருக்கும்-சீனி அம்மாளுக்கும் மகனாக 1954இல் பிறந்தார். 15 ஆண்டுகள் மதுரையில் ஆரம்பக் கல்வி பயின்றவர், பின்னர்  உசிலம்பட்டியில்  உயர்கல்வி முடித்தப் பின்னர்,  நூலக-அறிவியலில் மேற்படிப்பு மதுரையில் முடித்தவருக்கு சென்னை கல்வித்துறை இயக்குனர் அலுவலகத்தில் இரண்டாண்டு (1980-1982) வேலை. அதன் பின்னர்  1983இல் தமிழ்நாடு ஆவண காப்பக நூலகத்திற்க்கு மாற்றப் படுகிறார். இது அரசர் கால பட்டயங்கள் உத்தரவுகள், வரைபடங்கள், மன்னர்கள் மற்ற நாட்டு அரசர்களுக்கு எழுதிய கடிதங்கள், ஆவணங்கள், பின்னர் பிரிட்டிஷ் இந்தியாவின்  ஆட்சியாளர்களின் ஆவண கடிதங்கள், பிரிட்டனின் உத்தரவுகள், வரைபடங்கள், இந்திய சுதந்திரத்துக்கு முன்னர் சென்னை மாகாணத்தில் போடப்பட்ட அரசு உத்தரவுகள், பெரிய பெரிய ஒப்பந்தங்களை பத்திரப் படுத்தும் "ஆவணக்காப்பகம்" ARCHIVES. பின்னர் நாடு சுதந்திரம் அடைந்த பின்னர் இந்த ஆவணக்காப்பகம் தமிழ்நாடு அரசின் கீழ் வந்து பராமரிக்கப் பட்டு வருகிறது, அங்கே ஒரு நூலகம்,  அது  ஆராய்ச்சி-

மேற்படிப்பு, ஆய்வுக்கான நூல்கள், ஆவணங்கள் போன்ற சேவைகள் விசேட அனுமதி பெற்றப்பின்னர் ஆய்வு செய்ய தனி நபர்கள், மாணவர்களுக்கு அனுமதித்து வருகிறது. இந்த நூலகத்தில் நம் அய்யா 2009 முதல் வரை நூலகராக பணியாற்றி வந்துள்ளார்.

## திடீர் உடல்நலக் குறைவும் உடல் உபாதைகளும்:

எழும்பூரில் வேலை பார்த்து வந்த மு. நமசிவாயம் முதலில் மயிலாப்பூரிலும், அதன் பின்னர் சைதாப்பேட்டையிலும் வசித்து வந்துள்ளார் தினமும் அலுவலகத்துக்கு தொடர் வண்டிப் பயணம். இரண்டு மகள்கள், ஒரு மகன் என அவரது குடும்பம் இனிதே சென்றுவந்த நேரத்தில் அவருக்கு திடீர் அடிக்கடி உடல்நலக் குறைவும் இரத்த அழுத்தங்களும் ஏற்பட்டன. திடீர் படபடப்பு , கை கால் நடுக்கம் இப்படி இனம்புரியாத நடுக்கம், இரத்த அழுத்தம்,நெஞ்சு வலி, அதனால் அவரது பணிகள் பாதிக்கப்பட்டது, எல்லா உடல் நல ஆலோசனை, மருத்துவ ஆய்வு எல்லாம் செய்தாகிவிட்டது. மருத்துவ ரீதியாக 1990 முதல் - 1998 வரை எல்லா மருந்துகளும் கொடுத்தாகிவிட்டது. எல்லா பரிசோதனைகளும் செய்தாகிவிட்டது. ஒரு தொடர் மருத்துவ கவனிப்பும் செய்தாகி விட்டது, ஒரு கட்ட ஆய்வுக்குப் பின்னர் மருத்துவர்களால் கண்டுபிடிக்க முடியவில்லை, ஆனால், அவரது படபடப்பும், உணர்ச்சியும் குறையவில்லை. அவருக்கு அப்போது கடவுள் வழிபாடெல்லாம் கிடையாது. ஆனால் மருத்துவரோ அவரை தியான பயிற்சி செய்து பாருங்களேன். எங்காவது முறையாக தியானம் பழுகுங்கள் என்று சொல்லி அனுப்பிவிட்டனர்,

**"SIMPLIFIED KUNDALINI YOGA-SKY என்ற மனவளக்கலை மன்றம்"**
உலக சமாதான அறிவுத் திருக்கோயில் என்ற பிரார்த்தனை தளத்தையும், வாழ்க-வளமுடன் என்ற எண்ண அலைகளையும் மனவளக்கலை மூலம் உலகுக்கு வழங்கி வந்த திரு. வேதாத்திரி மகரிஷியின் சைதாப்பேட்டை கிளையில் அய்யா மு. நமசிவாயம் அறிமுக தியானப் பயிற்சி எடுக்கிறார். தியானத்தில் உட்கார பழகுகிறார். 6 மாத பயிற்சிக்குப் பின் அவரது உடல் உபாதைகள் குறைகின்றன , ஆனால் நிறைய அககாட்சிகளை காண்கிறார், அதுபற்றி மனவளக் கலை

மன்றத்தில் சொல்ல, " **நீங்கள் மகரிஷி சொன்ன மாதிரி பயற்சி செய்யாமல் ஏதோ வேறு மாதிரி செய்கிறீர்கள்"** என்று பதிலுரைக்கின்றனர் பிறகு அவர் அங்கே செல்லவில்லை, ஆனால் தியானம் மட்டும் தொடர்ந்து செய்து வந்தார். பாடத்தையும் கணித-சூத்திரத்தையும் ஆசிரியரிடமிருந்து கற்று தேர்ந்தப் பின்னர் ஆசிரியர் நம் கூடவே வர மாட்டார். அதுபோல பயிற்சியும் ஆர்வமும் அய்யாவை பிரபஞ்ச வெட்டவெளிக்கு அழைத்துச் சென்றது.

## அககாட்சிகள் தெரிய தெரிய கைகள் பரபரத்தன:

மு. நமசிவாயம் அய்யா இப்படி தொடர்கிறார் **"எங்கேயோ நான் கொண்டுசெல்லப் படுவேன் பேரானந்தமாக இருக்கும், புதிய புதிய காட்சிகளை நான் கண்டேன், மறுநாள் காலை வேலைக்கு சைதாப்பேட்டை பேட்டையிலிருந்து தொடர் வண்டியில் போகும் போதே இரவு கண்ட காட்சிகள் நினைவுக்கு வரும், அலுவலகத்துக்குப் போன பின்னர் உடனே அதை படமாக சிறிய காகிதத்தில் போட்டுவிடுவேன் . இப்படி போட்டு போட்டு சிலரிடம் காண்பித்த வேளையில் என்னை ஒழுங்கு படுத்தியது N. S வள்ளுவன் என்ற இளைஞர்,, நான் இருந்ததோ ஆவண காப்பக நூலகம். பல பேர் ஆராய்ச்சி நோக்கில் அங்கே நிறைய விடயங்களை அங்கே தேடுவார்கள் அப்படி அங்கே "சிந்துசமவெளி நாகரீக வட்டெழுத்துக்களை ஆராய்ச்சி செய்து வந்த அவர்தான் என்னை இப்படி வெறுமனே காகிதத்தில் போடவேண்டாம் , என்னென்ன அககாட்சிகள் வருகிறதோ, தெரிகிறதோ அதை நோட்டுப் போட்டு வரையுங்கள் என்றார் பின்னர் அதை அப்படியே செய்து வந்தேன் பலப் பல காட்சிகள் பலப்பல அனுபவங்கள். ஒரு சக்தி என் கையை நகர்த்தியது அதுதான் இப்படி வரைய வைத்தது , நான் முறையாக ஓவியம் பழகியதில்லை ஆனால் மிகத் தெளிவாக வரைந்தேன். நித்தம் நித்தம் ஒரு புதிய அனுபவம்.. இப்படி இருக்கையிலே ஒருநாள் அங்கு ஒரு அன்பர் வந்தார் அவரோ பத்திரிக்கை நிருபராய் இருந்து பின்னர் இராமலிங்க அடிகளாரின் வள்ளலார் பாதையிலே பயணித்த சாது, அவர் என் ஓவிய புத்தகத்தைப் பார்த்து 6ஆம் திருமுறையை படிக்க சொல்லி சென்றுவிட்டார். என் காதிலே அது ஆறாம் திருமந்திரம் என்று பதிவாகிவிட்டது.**

**எங்களது நூலகத்தில் இரண்டரை இலட்சத்திற்கு மேற்பட்ட புத்தகங்கள் அத்தனையும் அருமையான ஆய்வு நூல்கள் அரிய புத்தகங்கள், " ஏம்ப்பா அந்த ஆறாம் திருமந்திரத்தை எடுத்தா" என்று என் உதவியாளருக்கு உத்தரவிட்டேன் அவர் "திருமந்திரம்" என்ற அறிய புத்தகத்தை என் மேசையில் கொண்டு வந்து வைத்தார் அதை புரட்டியபடியே, "என்னப்பா நான் ஆறாம் திருமந்திரம் கேட்டேன் நீ இந்த பெரிய புத்தகத்தை வைத்து விட்டாய் என்றேன் என்னுடைய இன்னொரு உதவியாளர் எனக்கு " அய்யா தமிழர்களின் சமய நூல்களை 12 திருமறைகளாக தொகுத்துள்ளனர் அதில் 10ஆம் திருமறையென்பது திருமந்திரம்" எடுத்து சொல்கிறார் பிறகு நான் அந்த திருமந்திரத்தை படிக்க ஆரம்பிக்கிறேன்.. இறையருள் எனக்கு பெரும் உதவி செய்துள்ளது வந்த சாதுவோ வள்ளலாரின் "அருட்பா" (6ஆம் திருமறை ) என்று கைகாட்ட, என்கைக்கு வந்ததோ திருமந்திரம். பொதுவாக மூவாயிரம் தமிழ் என்ற திருமந்திரம் ரொம்ப பேருக்கு புரியாது. ஆனால் பிறகு ஒவ்வொரு நாளும் ஆழ்ந்து ஆழ்ந்து கூர்ந்து படிக்கிறேன். படிக்க,படிக்க நான் போட்ட பல படங்களுக்கு அங்கே தொடர்பு இருப்பது போல் எனக்கு புலப்பட்டது. அப்போதுதான் சிந்துசமவெளி நாகரீக வட்டெழுத்து ஆராய்ச்சியாளர் N. S வள்ளுவன் சொன்னார் you deciphered the TIRUMANTIRAM hymns என்றார். யாரும் பயணித்து காணக் கிடைக்காத காட்சிகளை நீங்கள் கண்டு இதை படம் போட்டுள்ளீர்கள் என்றார்.. நான் கண்ட பல அககாட்சிகளுக்கு பல பாடல்கள் அங்கே இருந்தது. மேலும் பல பாடல்களின் பொருள் நன்றாக புரிந்தது. என்று முடிக்கிறார்** மு. நமசிவாயம் அய்யா.

## பறந்ததும்-வரைந்ததும் / படித்ததும்-கிடைத்ததும் :

1990 முதல் 1998 வரை அவருக்கு உடம்பில் பல அவஸ்தைகள். ஒரு 100 அடி நடந்தால் கூட அவருக்கு பயம் ஆட்படும். உடம்பில் எல்லா நோய்களும் இருந்தது. ஆனால் தியானம் பழக பழக,, உட்கார உட்கார அவர் பிரபஞ்சத்திற்குள் பயணித்திருக்கிறார், பல அகக் காட்சிகளை கண்டு களித்துள்ளார். அந்த பிரபஞ்ச சக்தியே அவரை அதையெல்லாம் ஓவியமாக வடித்துள்ளது. எந்த நூலகத்தில் பணியாற்றினாரோ அந்த நூலகமே திருமந்திரத்தை அறிமுகப் படுத்துகிறது, அங்கேயே புத்தகமாக்கி, (தனி கைப்பிரதி) எதிர்கால இளைஞர் ஆய்விர்க்காக தமிழ்நாடு ஆவண காப்பக

நூலகத்திற்க்கே அர்ப்பணித்து விட்டார். அவர் சொல்கிறார், **"நான் ஓவியனல்ல, ஆனால் கிறுக்கியிருக்கிறேன். நான் மீனவனல்ல ஆனால் ஒரு பெரிய சும்மா பிரபஞ்ச குளத்தில் கையைவிட்டு துலாவினேன் பெரிய பெரிய அறிய மீன்கள் கிடைத்துள்ளன, " நான் ஒரு கணித ஆசிரியன். கணித சூத்திரங்களை கண்டுபிடித்து ஆவணப் படுத்தி விட்டேன், அவ்வளவுதான், நானே 100 மார்க்குகள் எடுப்பது என் வேலை அல்ல, உங்கள் கூடவும் வர முடியாது, நீங்கள்தான் அதைப் புரிந்து 100க்கு 100 எடுக்க வேண்டும், எல்லாமே பறக்கும் தட்டுகள் அது உங்களை பிரபஞ்சத்திற்கு அப்பால் அழைத்து செல்லும், வேறு வேறு அகக் காட்சிகளை தரக்கூடும், மூலரும் திருமந்திரமும் உதவும்".**

பின்னர் 2004 லிருந்து அவருக்கு நடக்க கூட முடியாதவருக்கு சக்தி அதிகரிக்கிறது,, சென்னையை சுற்றி, காஞ்சிபுரத்தை சுற்றி தொண்டை மண்டல கோயில்களுக்கெல்லாம் செல்கிறார், உண்மையான ஜீவசமாதி என்றால் என்ன, உயிரின் நிலை என்ன? எல்லாவற்றையும் அறிந்து 2009 இல் விருப்ப ஓய்வு பெற்று. கூடுவாஞ்சேரியில் வந்து உட்கார்ந்து விட்டார். அவருக்கு இப்போது எங்கேயும் போக நாட்டமில்லை. படித்தது திருமந்திரம் மட்டும்தான் கிடைத்ததோ பிரபஞ்ச இரகசியம்!. அவர் வரைந்த ஓவியத்திற்கும் இணைத்த திருமந்திர பாடலுக்கும் அவரே சர்வ தேசப் பல்கலை கழகம் அதைத்தான் எங்கள் "திருமூலர் அறக்கட்டளை" கொண்டாடுகிறது.

## திருமூலர் அறக்கட்டளையில் அய்யாவின் புத்தகம்:

கடற்கரையோரத்தில் சிப்பிகள் பொருக்கி சிறுபிள்ளைகள் விளையாடுவது போல; நாம் சிறு சிறு திருமந்திர மாலைகளை கோர்த்து புரிந்துகொள்ள முயற்ச்சிக்கிறோம், அழகு பார்க்கிறோம் ஆனால் பெருங்கடலோ பெரிய பெரிய பிரமாண்டத்தை பலப்பல "லெமூரியாக்களை உள்ளடக்கி வைத்துள்ளது அது போலத்தான் திருமூலரின் மூவாயிரந்தமிழ். அதைப் போலத்தான் எங்கள் நமசிவாயம் அய்யாவும். அவர் இந்த பிரபஞ்ச இரகசியங்களை திருமூலரின் திருமந்திர உதவியோடு வரைந்து ஓவியமாக்கி ஒட்டு மொத்த உலக சமூகத்திற்க்கே தந்து விட்டார் ( சுமார் 210 படங்கள் Inner journey, Yaathirai

2001, Occult images, cosmic dances இப்படி ) மலேசிய திருமந்திர மாநாட்டு ஏற்பாட்டளார்களே, இந்த 2016 ல் இங்கே கூடிய தமிழ் கூறும் நல்லுலகமே. இந்த ஆண்டு 2016 நவம்பரில் வருகிற ஐப்பசி திங்கள் அசுபதி நட்சித்திரத்துக்கு முன்னர் அதாவது அனைத்துலக திருமூலர் குருபூசைக்கு முன்னர் , சர்வதேச தரத்துடன் இந்த பிரபஞ்ச இரகசியம் ஆங்கிலத்தில் வண்ணப் புத்தகமாக உங்கள் கையில் இருக்கும்! நன்றி

" என்றும்உங்களுடன்-திருமூலர் ஆணையின்படி"


**P குமார். S. குமார்**
**"திருமூலர் அறக்கட்டளை"**
**சென்னை, தமிழ்நாடு.**

http://www.tirumular.com/
www.tirumular.org

email:admin@tirumular.com / pk@tirumular.com skumar@tirumular.com

தொலைபேசி: +91 44 4555 4027 அலைபேசி: + 91 9092755532




சென்னை-15
20-12-2003

அன்பர்களே,

உங்கள் அனைவருக்கும் வணக்கம். நூலகராகப் பணியாற்றும் எனக்கு எனது 45 வயதில்தான் திருமந்திரம் படிக்கும் வாய்ப்பு கிடைத்தது.

பன்னிரு திருமுறைகளில் திருமந்திரம் ஏனோ பலருக்கும் சென்றடையவில்லை. இப்பாடல்களும் அதில் பொதிந்துள்ள விஷயங்களும் பலருக்கும் சென்றடைய நான் இந்த முயற்சியைத் தொடங்கியுள்ளேன்.

ஒரு பாம்பாட்டி தனது தாயத்துக்களை விற்பதற்கு மகுடி வாசித்து கூட்டம் கூட்டுவது போல்தான் இப்பாடல்களுக்கு நான் வரைந்துள்ள படங்களும். படங்கள் என்னுள் தோன்றிய இப்பையும் கூடுங்களும் தான்.....

மு. நமசிவாயம்


சீவன் எனச்சிவன் என்னவே றில்லை
சீவனார் சிவனாரை அறிகிலர்
சீவனார் சிவனாரை அறிந்தபின்
சீவனார் சிவனாட்டு இருப்பரே
திருமந்திரம் 2017


"M. Namasivayam's journey into the unknown
is highly authentic"
M. Valluvan.
20-12-2000




- திருமூலர்
914